2012 மார்ச் 28]

(அ) பால் கொள்முதல் விலையைத் தனியாருக்கு இணையாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள கிராமப்புற மக்கள் நலனையும், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்களுக்குப் பால் வழங்கும் பால் உற்பத்தியாளர் நலனையும் கருத்தில்கொண்டு, அரசாணை (நிலை) எண் 139, நாள் 17–11–2011–ன்படி பால் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ் அவர்கள்.*

திரு. கா.கோ. ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடிக் காற்றில் சிக்கிய அகல் விளக்காகவும், காலங்காலமாகக் கவலையின் பிடியினால் கண்ணீர் சிந்தி பரிதவித்த பால் உற்பத்தியாளர்களின் வயிற்றுக்குப் பால் சோறாகவும், தாகத்தில் தவித்த தமிழக விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தாய் மடியாகவும் இருந்து, விலை உயர்வுக் கோரிக்கையைக் கனிவோடு பரிசீலித்து, புதிய விலையை நிர்ணயித்து ஆணை பிறப்பித்த ஏழைகளின் கனவுகளை நனவாக்க வந்த கருணையின் கருவூலமே, சர்வதேசத்தின் சமாதான குரலே, தன்னை உருக்கி பெருந்தவம் புரியும் பூபாலப் புனிதையே, வெற்றித் திருமகளே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தமிழகப் பால் உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ.பெ. பூனாட்சி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

தூர்வாருதல்

*****6606—திரு. தோ.பெ. பூனாட்சி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர் ஒன்றியம், சிறுபத்தூர் சிறிய நீர்த்தேக்கத்திற்கான வரத்து வாய்க்காலைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கேட்டால்தான் கொடுப்பார் கிருஷ்ண பரமாத்மா, கேட்காமலே கொடுக்கக்கூடியவர் அன்னை. அழிக்க நினைத்தவர்களை எதிர்க்கக்கூட திராணி அற்றவர்களாக ஆக்கிய இதய தெய்வம் அம்மா ஆட்சியில், உங்களுடைய கோரிக்கை பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, திருச்சி மாவட்டம், மணச்சநல்லூர் ஒன்றியம், ஓமந்தூர் பெரிய ஏரியில் இருந்து வரும் உபரி நீர் வாய்க்காலின் நீளம் 7,300 மீட்டர்; அகலம் 45 மீட்டர் ஆகும். பெருமங்களம் பெரிய ஏரியிலிருந்து வரும் உபரி நீர் வாய்க்காலின் நீளம் 6,000 மீட்டர்; அகலம் 50 மீட்டர் ஆகும். உப்பாறு நீர்த்தேக்கத்திற்கு வரும் இவ்விரு உபரி நீர் வாய்க்கால்களையும் ரூபாய் 160 இலட்சத்தில் தூர்வாரி செப்பனிடுவதற்கு விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தோ.பெ. பூனாட்சி அவர்கள்.*

திரு. தோ.பெ. பூனாட்சி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, மணச்சநல்லூர் ஒன்றியம், சிறுபத்தூர் கிராமத்தில் உள்ள உப்பாறு நீர்த்தேக்க வரத்துக் கால்வாயைத் தூர்வார வேண்டுமென்று எங்களுடைய தொகுதியைச் சேர்ந்த மக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். அந்த அடிப்படையிலே, புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே எங்கள்*

2012 மார்ச் 28]

பகுதியில் தூர்வாரி எங்களுக்கெல்லாம் அருமையாக நீர்வரத்து வழங்க அம்மா அவர்கள் ஆணையிடுவார்கள் என்று சொல்லி, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தாறு கால்வாய்களெல்லாம் தூர்வாரப்படாமல் அலைக்கழிந்து இருக்கின்றன. அவை சரி செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால், பதில் சொல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மனோரஞ்சிதம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

9—

கால்நடை சுகாதார நிலையம்

***6327—திருமதி மனோரஞ்சிதம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊத்தங்கரை தொகுதி, கே. எட்டிப்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அம்மா என்றாலே அன்புதான் என்று அனைவருக்கும் தெரியும். அந்த அடிப்படையிலே, தமிழ்நாட்டு மக்களின்மீது மட்டுமல்ல;